

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கோட்டை கருங்குளத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில் பல்வேறு அரசு துறைகள் மூலம் 141 பயனாளிகளுக்கு ரூபாய் 42.92 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட பலர் உள்ளனர்.




விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர் கூட்டம் மல்லாங்கிணற்றில் ராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு பல்வேறு தீர்மானங்கள் பற்றி பேசினார். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வனராஜ், திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன், மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன், மாவட்ட கவுன்சிலர் தங்கத் தமிழ்வாணன், விருதுநகர் நகரத் திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், ஒன்றிய செயலாளர்கள் காரியாபட்டி கண்ணன், செல்வம், விவேகராஜ், தங்கராஜ், இளைஞர் அணி கிருஷ்ணகுமார், பொது குழு உறுப்பினர் சுதாகர், விவசாய தொழிலாளர் அணி சுரேஷ், அரசு போக்குவரத்து கழக தொமுச பொதுச் செயலாளர் ராஜசெல்வம், இலக்கிய அணி வை.மலையரசன், முன்னாள் பொது குழு உறுப்பினர் நவநீத கிருஷ்ணன், வர்த்தக அணி போஸ் (ஏ) ஜெயசந்திரன், விருதுநகர் அவைத் தலைவர் காசிராஜன், நகர திமுக துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், மரியராசு, மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, மகளிர் அணி சரஸ்வதி , வகிதா ரகுமான், காரியாபட்டி நகர செயலாளர் செந்தில், வழக்கறிஞர் அணி அசோக், பொதுக்குழு கந்தசாமி, பாண்டி நகர் அறிவழகன், விவசாய தொழிலாளர் அணி நேஷனல் ராமர், ஓட்டுனர் அணி எல்.திருமாறன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர திமுக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் – 28 வது ஆண்டு

# அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகள் நடத்த நடவடிக்கை!

## வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தகவல்!



சென்னை, செப். 21 - கோவையில் 27வது மாநில வனத்துறைப் போட்டிகள் தொடக்க விழாவில் வனத்துறைப் போட்டிகளை தொடங்கி வைத்து அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் பேசியதாவது,

விளையாட்டுப் போட்டிகள் என்பது மிக முக்கியமான நிகழ்வாகும். விளையாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நம்மாநிலத்தில் விளையாட்டுத் துறைக்கு அதிக அளவில் முக்கியத்துவம் வழங்கி, சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை நம் மாநிலத்தில் நடத்தி பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தவகையில் தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் மிகப்பெரிய அளவில் மாற்றங்களை உருவாக்கும்வகையில், சென்னையில் சர்வதேச அளவிலான செஸ் போட்டிகள் நடத்தப்பட்டும், அகில இந்தியஅளவிலான கேலோ இந்தியா இளையோர்களுக்கான போட்டிகளும், பார்முலா 4 கார்பந்தய போட்டி, உலக நீர்ச்சறுக்கு விளையாட்டுப் போட்டிகள் போன்ற விளையாட்டுப் போட்டிகள் உலகதரத்தில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

தற்போது விளை யாட்டுத் துறையை சேர்ந்த வீரர் வீராங்கனைகள் அதிகஅளவில் ஊக்குவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக பாரீஸில் நடைபெற்ற பாராஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்தமாரியப்பன் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்துள்ளார். களப்பணியாளர், அமைச்சு பணியாளர்கள், அலுவலர்களையும் உள்ளடக்கிய பெரிய துறையின் உடல்தகுதியும், ஆரோக்கியத்துடனும் இருப்பது மட்டுமே வனத்தையும், வன உயிரின பாதுகாப்பு , வன மேம்பாட்டையும் உறுதி செய்ய இயலும்.

**விளையாட்டுத் திருவிழா!**

அகில இந்தியஅளவில் வேறு எந்ததுறையிலும் இல்லாத வகையில், அனைத்து விதமான விளையாட்டுகளையும் உள்ளடக்கிய மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவாக வனத்துறை விளையாட்டு போட்டிகள் நடைபெறுவதை அறிந்து பெருமிதம் அடைகிறேன். அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிகளுக்காக தேர்வு செய்யும் விதமாகவும், மண்டலங்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டிகளை உருவாக்கும் விதமாகவும், கோயம்புத்தூரில் ஒவ்வொரு முறையும் மாநில அளவிலான வனத்துறை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் அகில இந்திய வனத்துறை விளையாட்டுப்போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகின்றது. 2000ஆம் ஆண்டு 8வது அகில இந்திய வனத்துறை போட்டிகள் சென்னையில் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

அகில இந்திய வனத்துறை போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்கள் பெறும் நமது துறை சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்த சீரிய ஆட்சியில் ஊக்கத் தொகை வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அகில இந்திய அளவில் வெற்றி பெறுகின்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு தற்போது தங்கம் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.20,000ம், வெள்ளி பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.15000, வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.10,000ம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ஊக்கத்தொகையினை உயர்த்தி வழங்க கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இதுகுறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, ஊக்கத்தொகை உயர்த்திவழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற 26வது அகில இந்திய வனத்துறை போட்டிகளில் தமிழ்நாடு வனத்துறை அணி 18 தங்கம், 16 வெள்ளி, 17 வெண்கலப் பதக்கங்களை வென்று 5வது இடத்தை பிடிக்க உறுதுணையாகஇருந்த அனைத்து வீரர் மற்றும் வீராங்கனைகளையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

அனைத்து துறைகளிலும் முன்னோடியாக விளங்கும், தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாகவும், நமது மாநிலத்தில் சிறப்புகளையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் வித மாகவும், முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையின்படியும், விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் உறுதுணையுடன், 28வது ஆண்டு அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்த நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

**ஜப்பான் நிதியுதவி!**

தமிழ்நாடு வனத்துறையையும், வனங்களை மேம்படுத்தவும் அரசு மேற்கொண்ட சீரிய முயற்சியினால் 2022 முதல் 2030 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும்வகையில் ரூ.920.52 கோடி செலவில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மனித விலங்குகள் மோதல்களை தடுக்கும் பொருட்டு, அகழிகள் அமைக்கும் பணிகள், செயற்கை, நுண்ணறிவு தடுப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு கோவை பாலக்காடு மின்சார ரயில் இருப்பு பாதையில் பல ஆண்டுகளாக ஏற்பட்டு வந்த யானை உயிரிழப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

வனத்திற்குள் நீர் ஆதாரங்களை உருவாக்குதல், "மேய்புலம்" என்ற திட்டத்தின் கீழ் மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல், மனித வனவிலங்கு மோதல் தடுக்கும் தடம்திட்டத்தின் கீழ் முன்னறிவிப்புகள் செய்து மனித வனவிலங்கிடையே இணக்கமான சூழ்நிலையே உருவாக்கப்பட்டு, மோதல்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசின் சாதனையாக நான்கு முக்கிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வனப்பரப்பை 10 ஆண்டுகளில் 23.76 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக அதிகரிக்க 13500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 260 கோடி நாட்டு மரங்களை நட்டு வளர்த்து காடுகளை பசுமையாக மாற்றும் நோக்கோடு, பசுமை தமிழ்நாடு இயக்கம், மாநிலத்தின் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் விதமாக, காலநிலை மாற்ற இயக்கம் மாநிலத்தில் உள்ள அனைத்து ஈரநிலங்கள், குளங்களை பாதுகாக்கும் வகையில், மாநில ஈரநில ஆணையம், தமிழ்நாட்டில் உள்ள கடற்கரை காடுகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கு தமிழ்நாடு கடற்கரை பாதுகாப்பு இயக்கம், போன்ற நாட்டிலேயே முன்மாதிரியான இயக்கங்கள் நம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**தேவாங்கு சரணாலயம்!**

இந்தியா அளவில் நமது மாநிலத்தில் மிக அதிகமாக 18 ராம்சார் தளங்கள் அறிவிக்கப்பட்டு நம் மாநிலத்திற்கு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவில் முதல்முறையாக திண்டுக்கல் கரூர் மாவட்டங்களுக்கு இடையே தேவாங்கு சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் பெரியார் வனச் சரணாலயம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில விலங்கான வரையாடுகளை பாதுகாக்கும் வகையில் , நீலகிரி வரையாடு திட்டம் , கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சூழல் மேம்பாட்டு திட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளது. தரமான மரவிதைகளை வழங்கும் நோக்கத்துடன், அழிந்துவரும் அரிய தாவரங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் ரூ.10 கோடி மதிப்பிலான விதை பெட்டகம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ளார்கள் என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

தற்போது நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் தங்கள் முழுத்திறமையினை வெளிபடுத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கவும், விளையாட்டு உணர்வுடன் நீங்கள் அனைவரும் உழைக்க வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டிருக்கின்ற, 12 மண்டலங்களைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளையும் வாழ்த்தி, நீங்கள் "True Spirit of Sportsmanship" என்ற அடிப்படை தாரக மந்திரத்தினை மறவாமல் முழு ஆர்வத்துடன், திறமையினை வெளிபடுத்தி வெற்றிபெற கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 முதல் 20 வரை சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெறவுள்ள 27 அகில இந்திய வனத்துறை போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளும் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமைசேர்க்கும் வகையில் விளையாட மனதார வாழ்த்துகிறேன். இவ்வாறு அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.



இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை செல்லும் சாலையில் நேற்று (20.09.2024) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சாமுத்துராமலிங்கம் எம்.எல்.ஏ.இருவரும் ரூ.25.60 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன், தங்கம்,தேசிய நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர்கள் கேசவன் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை மாவட்டம் – திசையன்விளை வட்டம்

# கோட்டை கருங்குளத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாம்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நெல்லை, செப். 21 - நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கோட்டைகருங்குளத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாம் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பல்வேறு அரசு துறைகளின் மூலம் 141பயனாளிகளுக்கு ரூபாய் 42.92 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் சாமானிய மக்கள், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.பெண்களுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம், இந்தியாவிற்கே முன்னோடி திட்டமான கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் தகுதியான மகளிர்களுக்கு ரூபாய் 1000 ம் வழங்கப்பட்டு வருகிறது.அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் திறனை அதிகரிக்க ஸ்மார்ட் வகுப்பறை மூலம் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் 6 முதல் 12 ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் மாத ரூபாய் 1000 ம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.மாணவ,மாணவியர்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்ட அரசாக திகழ்கிறது.மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று அவர்களது கோரிக்கை மனுக்களை பெற்று பரிசீலனை செய்து முழுமையாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் பெருந்தலைவர் காமராஜர் பட்டிதொட்டி எல்லாம் பள்ளியை திறந்து மதிய உணவினை தந்து கல்விக் கண் திறந்தவர்.அவர்களின் நல்வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கி வருகிறார் கள்.

மேலும் மாணவ,மாணவியர்கள் என்ன படித்தால், என்ன வேலை கிடைக்கும் என்பது அறிந்து கொள்வதற்காக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 12ம் வகுப்பு முடித்து பட்டப்படிப்பு செல்பவர்களுக்கு பயிற்சி கொடுத்து,படிப்பு முடிந்து மாணவ,மாணவியர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள்.பொது மக்களின் அடிப்படைத் தேவையை கருத்தில் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகளுக்கு ரூபாய் 605.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவடைந்தால் கிரா மத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் தாமிரபரணி தண்ணீர் கிடைக்கும். இன்று(2109 2024) பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நடைபெற உள்ள தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

முன்னதாக முகாமில் சுகாதாரத்துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, மகளிர் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு துறைகளின் செயல்முறை பணிகள் மற்றும் விழிப்புணர்வு கண்காட்சியினை சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டார்.

நிகழ்வில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன், திட்ட இயக்குனர்(மகளிர் திட்டம்) இலக்குவன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,ஜான்ஸ்ரூபா, தனி துணை ஆட்சியர் ஜெயா, வேளாண்மை இணை இயக்குனர் (பொ)கிருஷ்ணகுமார் கோட்டை கருங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் முருகன், திசையன்விளை வட்டாட்சியர் நாராயணன்,ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி உள்பட அரசு அலுவலர்கள், கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க. அரசின் ஒரே நாடு – ஒரே தேர்தல்!

# ஜனநாயகம் - கூட்டாட்சித் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் எதிர்க்க வேண்டும்!

## "தீக்கதிர்" நாளேடு தலையங்கம்!

சென்னை, செப். 21 - ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றால்தான் ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கட்சி, ஒரே ஊழல் என்றெல்லாம் திணிக்க முடியும். ஜனநாயகத்தில், பன்முகத் தன்மையில் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் இதைக் கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டுமென "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற பா.ஜ.க.வின் முடிவுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு அளித்த 11 பரிந்துரைகளை ஒன்றிய அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஒப்புதலுக்கு பல்வேறு தரப்பினர் மத்தியில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. செலவைக் குறைக்கலாம் என்பதுதான் பிரதானமாக முன்வைக்கப்படுகிறது. தற்போது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் நடத்தலாம் என்பதோடு, பின்னர் இதில் உள்ளாட்சி அமைப்புகளையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை வழங்கப்படுகிறது.

கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் நமது அரசியலமைப்பு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பணிகள் தெளிவாகப் பிரிக்கப் பட்டுள்ளன. யார் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று தெளிவான வரையறை உள்ளது. இதில் தலையீடுகள் ஏற்பட்டால் அரசியல் சட்டத்தின்படி எது சரி என்பதை நீதித்துறை தெளிவுபடுத்தும். இப்படித்தான் நமது நாடு இயங்கி வருகிறது.


தீக்கதிர்
2024 செப்.20 வெள்ளிக்கிழமை
ஒரே மதம், ஒரே மொழி, ஒரே ஊழலை நோக்கி...
ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற பாஜகவின் முடிவுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்துவது குறித்து முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழு அளித்த 11 பரிந்துரைகளை ஒன்றிய அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் பிரச்சினைகள் வெவ்வேறாகவே இருந்து வருகின்றன. ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சியை மதிப்பீடு செய்து, மக்களவைத் தேர்தல்களில் வாக்களிக்கிறார்கள். சட்டமன்றத் தேர்தல்களில் அந்தந்த மாநிலங்களில் இருக்கும் ஆட்சியை மதிப்பீடு செய்கிறார் கள். மக்களவைத் தேர்தலில் ஒரு கட்சிக்கும், சட்டமன்றத் தேர்தலில் வேறொரு கட்சிக்கும் வாக்களிப்பதை நாம் பார்த்து வருகிறோம். மோடி அரசைப் பொறுத்தவரை ஐந்து ஆண்டுகளுக்கு எந்தவித அழுத்தமும் இல்லாமல் தங்களின் மத வெறி, பெருமுதலாளி ஆதரவுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தலாம் என்றே திட்டமிடு கிறது.

மாநிலங்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பவையாக பிராந்தியக் கட்சிகள் உள்ளன. நாட்டில் 57 அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகள் உள்ளன. இவற்றை முடக்கும் நோக்கத்திலேயே ஒரே நாடு ஒரே தேர்தல் கொண்டு வரப்படுகிறது கேரளா உட்பட பல மாநிலங்களில் உள்ளாட்சிகளுக்கு என்று தனி அதிகாரங்கள் வழங்கப்பட்டு, நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது. அதற்கான தேர்தலில் மக்கள் முன்பாக இருக்கும் பிரச்சினைகளும் மாறுபட்ட தாகவே இருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தலும் இந்த வரையறைக்குட்பட்டால் பெறும் குழப்பமே மிஞ்சும்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றால்தான் ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கட்சி, ஒரே ஊழல் என்றெல்லாம் திணிக்க முடியும். ஜனநாயகத்தில், பன் முக த்தன்மையில் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் இதைக் கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தேனி வடக்கு மாவட்டம் போடி நகர்மன்ற 19 வார்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியை 19 வார்டு கவுன்சிலர் வெங்கடேஷ் குமார் பார்வையிட்டார். உடன் நகராட்சி பொறியாளர் குணசேகர், இளநிலை பொறியாளர் சரவணன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.